முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வியாக்ரமர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.11.2018, திங்கட்கிழமை

1. **சற்குருவே ஆறுமுக அரங்கனே**
**சகலருக்கும் அருளி காக்க வந்த**
**அற்புதமிக்க அண்ணலே தேசிகனே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி துலை திங்கள்**
**தெரியவே மூவாறோர் திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள் 05.11.2018, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு வியாக்ரமர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் சீடர்கள்
ஞான பலம் கொண்டு சிறந்து
நாலா தேசமும் குருவின் பேரில்
4. பேரிலே உயர் சேவை ஆற்ற
பெருந் தர்மம் செய்து வருக
வரிசைபட அரங்கன் குடிலை
வணங்கி உலகோர் வருக
5. வருகவே நல் பாதுகாப்புடன்
வாழும் காலமே இலக்கை எட்டி
முருகப்பெருமான் தயவும் கிட்டி
முழுமை ஞானி ஆகும் வாய்ப்பு
6. வாய்ப்பு பெறுவர் அரங்கர் அருளால்
வல்லமை கூடும் தீட்சை பெற்று
மெய்ஞான வழி வருபவர்க்கு
மேலான சக்தி பலம் அடைவதுடன்
7. அடைவர் அருள் பொருள் வளம்
ஆஸ்தி நற்பேரு புகழென
சோடை போகா எல்லாவகையும்
சுபிட்சம் சகல வரமும் பெறுவர்
8. பெருமைமிகு எங்கள் கலவை
பேதமிலா ஆறுமுக சக்தி
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அகிலம் காக்கும் கலியுக குரு

9. குருவடி திருவடியாக எண்ணி
குவலயமே சரணடைவு காண
பெருமாற்றம் பேரிடர் இல்லா
பெரும் பாதுகாப்பு மிக்க நல்ல

10. நல்லதொரு ஞான யுகமாக
ஞானிகள் ஆளும் யுகமாக
வல்லமைபட மாறுதல் காணும்
வருமுலகில் கொலை பாதக ஹிம்சை நெறி

11. நெறி ஒழிந்து எல்லா திக்கும்
நேர்மைபட சைவநெறி கொல்லா நெறி
தருமம்பட ஏற்று நிலைப்பெறும்
தண்டாயுதன் தலைமை உருவாகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வியாக்ரமர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உண்மை ஞானம்தனை போதித்து உலகோரை நல்வழிப்படுத்துகின்ற உண்மை ஞான சற்குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே. உலக மக்கள் அனைவருக்கும் பேதாபேதம் இல்லாமல் அருள் செய்து காக்கின்றபடி அற்புதங்கள் நிறைந்திட்ட அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிக மகா ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள் 05.11.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வியாக்ரமர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வியாக்ரமர்.

உயர்வுமிக்க ஞானம் கொண்ட ஆறுமுக அரங்கமகா தேசிகரின் சீடர்கள் உலகினில் அரங்கன் அருளால் ஞானபலம் கொண்டு சிறந்து விளங்கி நான்கு திசைகளிலும் எல்லா தேசங்களுக்கும் குரு அரங்கன் பெயரில் சென்று அத்தேசங்களில் எல்லாம் உயர்வான ஆன்மீக சேவைகளை செய்வதுடன் பெருந்தர்மங்களை செய்து வருகின்றார். அரங்கனும் சீடர்களும் உலகமெலாம் தர்மங்களைச் செய்து வந்து உலகின் தர்மபலத்தினை பெருக்கி வருகின்றனர்.

உலகின் தர்மத்தைக் காக்கும் தர்மத்தின் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை உலக மக்களெல்லாம் மனம் விரும்பி நம்பிக்கையுடன் வந்து அரங்கன் திருவடி பணிந்து பயபக்தியுடன் வணங்கி வர, அவர்களுக்கு அரங்கன் அருளினாலே நல்ல பாதுகாப்பு கிடைப்பதுடன் அவர்கள் வாழும் காலத்திலேயே அவர்கள் விரும்பிய இலட்சியத்தை இலக்கை அடைந்து முருகப்பெருமானின் தயவைப் பெற்று முழுமை ஞானம் பெற்று ஞானியாகும் வாய்ப்பினையும் பெற்றிட வாய்ப்புள்ளதப்பா.

அவ்விதமே அரங்கன் அருளையும் முருகப்பெருமான் அருளையும் பெற்று ஞானம் அடைவதற்கான வாய்ப்பினை பெற்றவர்கள் ஆறுமுக அரங்கன் அருளினை முழுமையாக பெற்று வல்லமைகளையும் தந்தருளும் தீட்சை உபதேசங்களை அடைந்து அரங்கன் கூறும் மெய்ஞான வழியில் தளராது தவறாமல் நடந்து வந்திட மேன்மையான பல சக்திகளை பலமுடன் அடைந்திடுவார்கள்.

மேலும் அவர்கள் சக்தியை பெறுவதுடன் அருள் வளமும், பொருள் வளமும் பெற்று நல்ல ஆஸ்திகளையும் அந்தஸ்தையும் பெற்று நற்பேர் நற்புகழ் என வீண் போகாத குற்றமற்ற வாழ்வினை சகல சுபிட்சங்களுடன் ஞானிகளிடத்து சகலவிதமான வரங்களையும் பெற்று சிறப்படைவார்கள்.

முற்றுப்பெற்ற ஞானிகள் எங்களின் கலவையாக கட்டமைப்பாக பல ஞானிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய தேகத்தை பெற்றிட்ட பேதாபேதமற்ற சர்வசக்தி ஆறுமுக சக்தியினை முழுமையாக பெற்று அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே இவ்வுலகை காக்கவல்ல ஒரேயொரு சற்குரு ஆவார். அவரே கலியுகத்தின் உண்மை குரு ஆவார். அவரே யுகமாற்றம் செய்ய வந்திட்ட யுகமாற்ற ஞானி ஆவார்.

அப்பேர்ப்பட்ட உயர்வும் ஆற்றலும்மிக்க ஞானகுரு அரங்கன் அடியை திருவடியாகவே இறைவனடியாகவே எண்ணி பயபக்தியுடன் அரங்கன் திருவடிகளிலே இந்த உலகம் சரணடைந்திட்டால் உலகினில் பெரும் மாற்றங்கள் உண்டாகிடும். இயற்கை பேரிடர்கள் இல்லாத பெரும் பாதுகாப்புமிக்க நல்லுலகமாக, ஞானஉலகமாக, ஞானிகள் ஆட்சி செய்யும் ஞான ஆட்சி கொண்ட ஞானயுகமாக இவ்வுலகம் வல்லமைகளை பெற்று சிறப்படையும். வருங்காலங்களில் கொலை பாதகம் இல்லாத உலகமாக மாறி உயிர்களை துன்புறுத்தும் இம்சைநெறி அழிந்து துன்பமற்ற நெறி செழித்தோங்கி எல்லா திசைகளிலும் நேர்மையுடன் உயிர்க்கொலையற்ற புலால் மறுத்து, சைவ உணவை மேற்கொண்டு கடைப்பிடிக்கும் நெறியான சைவநெறியாகிய கொல்லாநெறி உலகம் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு உலகம் முழுதும் நீதிநெறியுடன் தர்மத்தின் வழியில் மக்கள் நடந்து இவ்வுலகமே தர்மஉலகமாக நிலைப்பெறும். அந்த அற்புத உலகினிலே முருகப்பெருமானே தலைவனாக இருந்து வழிநடத்தி உலகைக் காத்து ஞானஆட்சி நடத்திடுவார் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வியாக்ரமர்.

–சுபம்–